**Previous Examination date – 01–11–2023**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 268 of 2018**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : சகாயராஜ்** | **Father/Husband's Name: கணபதி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 01.11.2023.**

**Accused A1 and A2 present.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் எவிசன் நகர் மேலபாளயத்தில் குடியிருந்து ஜவுளி வியாபாரம் பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இந்த புகாரை நான் தான் கொடுத்தேன். கடந்த 10.07.2017 ம் தேதி நான் ஈரோட்டில் இருந்து ஜவுளி எடுத்து வந்து அமரபூண்டிக்கு வியாபாரத்திற்காக சென்றிருந்தேன். சம்பவம் நடப்பதற்கு முன்பாகவே ஏற்கனவே எனது வீட்டில் மூன்று சேவல்கள் காணாமல் போயிருந்த நிலையில் எனது மனைவி பட்டியல் சாட்சி 3 பாக்கியலட்சுமி எனக்கு போன் செய்து நமது வீட்டில் கூண்டில் இருந்த சேவல்களை இரண்டு பேர் திருட வந்ததாகவும் எனது மனைவி எனது அம்மா மற்றும் அங்கிருந்தவர்கள் சேர்ந்து எதிரிகளை பிடித்து வைத்துள்ளதாகவும் எனக்கு தகவல் சொன்னார். எனது மனைவி எனக்கு போன் செய்த போது மதியம் 2 மணி இருக்கும். நான் அப்போது எனது வீட்டிற்கு 2 கி.மீ. தொலைவில் வியாபாரத்தில் இருந்தேன். தகவல் சொன்னவுடன் நான் எனது வீட்டிற்கு சென்று பார்த்தபோது அங்கு ஆஜர் எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் எனது சேவல்களை திருட முற்பட்ட போது பிடிபட்ட நபர்கள் என்று தெரிந்து கொண்டேன். **புகார் அ.சா. ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**2. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவம் குறித்து கேள்விபட்டு சம்பவத்தினத்தன்று மதியம் 2.10 மணிக்கு எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் மதியம் 3 மணிக்கு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். போலிசார் எனது வீட்டிற்கு சம்பவம் நடந்தவுடன் வந்துவிட்டார்கள் என்றும் அவர்கள் தான் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்று சொன்னால் சரிதான். போலிசார் சொல்லியதன் பெயரில் தான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நானாகதான் புகார் கொடுத்தேன். சம்பவம் நடந்த போது எனது வீட்டில் அடிதடி நடந்ததா என்றால் சாட்சி முதலில் ஆம் என்று சொல்லிவிட்டு பிறகு அடிக்கவில்லை என்றும் போலிசார் அவர்களை அடிக்க வேண்டாம் புகார் கொடுங்கள் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று சொன்னதாக சாட்சியம் அளிக்கிறார்.**

**3. புகாரை யார் எழுதினார்கள் என்றால் என் கூட இருந்த பொன்னுசாமி தான் எழுதினார். புகாரில் யார் கையொப்பம் போட்டோம் என்றால் நான், எனது மனைவி பாக்கியலட்சுமி, எனது அம்மா சின்னதாயிமேரி, பொன்னுசாமி, சுப்பிரமணி, ராமராஜ் மற்றும் ஒருவர் கையொப்பம் போட்டோம். எங்கள் வீட்டில் கோழிக்கூண்டானது எங்களது வீட்டின் வலதுபுறமாக இருந்தது. நான் போன போது எனது வீட்டில் 10, 20 அடி தூரத்தில் அமைந்துள்ள சின்டக் டேங்க் அருகில் எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு போன போது எனது வீட்டில் பக்கத்து வீட்டுகாரர்கள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. எல்லோரும் அங்குதான் இருந்தார்கள். தவமணி, சுஜி, பொன்னுசாமி, சுப்பிரமணி, ராமராஜ், வடிவேல் மற்றும் ஒருவர் அங்கு இருந்தார்கள். நான் மேற்சொன்ன யாருமே எனது வீட்டிற்கு பக்கத்தில் குடியிருப்பவர்கள் இல்லை என்றும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் வழக்கிற்காக நானும் போலிசாரும் சேர்ந்து ஜோடித்துள்ள நபர்களின் பெயர்களை சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் சம்பவத்தின்போது சம்பவ இடத்திற்கு அருகில் அமைந்துள்ள சாலையில் வழிப்போக்காக சென்றார்கள் என்றும் சந்தேகப்பட்டு எதிரிகளை பிடித்து அடித்து அவர்கள் மீது பொய் புகார்**

**கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு சம்பவத்தின் போது காயமானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.**

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.11.21 10:33:46 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி

**Previous Examination date – 01–11–2023**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 268 of 2018**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : பாக்கியலட்சுமி** | **Father/Husband's Name: சகாயராஜ்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 01.11.2023.**

**Accused A1 and A2 present.**

**<u>முதல் விசாரணை</u>**

**1.** நான் எவிசன் நகர் மேலபாளயத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 10.07.2017 ம் தேதி மதியம் 2 மணிக்கு நானும் எனது மாமியாரும் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரிகள் எங்களது வீட்டின் கூண்டிலிருந்த கோழிகளை பிடித்தார்கள் சத்தம் அதிகமாக இருந்தது. நான் வீட்டில் இருந்து வெளிய வந்து பார்த்தேன். எனது வீட்டில் ஏற்கனவே 6 மாதத்திற்கு முன்பாக மூன்று கோழிகள் காணாமல் போயிருந்தது. இந்நிலையில் எதிரிகள் கோழி திருட வந்ததை தெரிந்து கொண்டு நான் சத்தம் போட்டேன். எங்கள் வீட்டிற்கும் ரோட்டிற்கும் இடையில் 10 அடி தூரம் இடைவெளி இருக்கும். நான் சத்தம் போட்டதில் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் வேலைசெய்து கொண்டிருந்தவர்கள் அங்கு வந்துவிட்டார்கள்.

2. அவர்கள் யார் என்ன எதற்காக வந்தார்கள் என்று விசாரித்தபோது கணியூர் காரத்தொழுவு பக்கத்தில் இருந்து வந்ததாகவும் சும்மா வந்ததாகவும் சொன்னார்கள். நான் சும்மா எதற்காக வந்து எனது கோழியை பிடிக்கிறீர்கள் என்று கேட்டேன். அப்போது அங்கிருந்தவர்களிடம் நானும் எனது மாமியாரும் மட்டும் தான் வீட்டில் இருப்பதாக சொன்னேன். அவர்கள் எனது கணவருக்கு போன் செய்து தகவல் சொல்லும்படி சொன்னார்கள். நான் எனது கணவருக்கு போன் செய்து நடந்த

விவரங்களை சொன்னேன்.

3. எனது கணவர் எனது வீட்டில் இருந்து 2 கி.மீ தொலைவில் இருந்தார். அவர் நான் தகவல் சொன்னவுடன் எனது வீட்டிற்கு வந்துவிட்டார். எதிரிகள் TVS XL100 என்ற இருசக்கரவாகனத்தில் வந்திருந்தார்கள். எதிரிகளை எனது கணவர் இருசக்கரவாகனத்துடன் சேர்த்து காவல்நிலையத்தில் ஒப்படைத்து புகார் கொடுத்தார். அவருடன் சுப்பிரமணி என்பவர் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

4. சம்பவம் நடந்து போலிசார் 1 மணி நேரம் கழித்து மதியம் 3 மணி அளவில் எனது வீட்டில் என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னிடம் கையெழுத்து எதும் வாங்கவில்லை. கோழிக்கூண்டானது எனது வீட்டிற்கு கிழக்காக ரோட்டின் மேல் வைக்கப்பட்டிருந்தது. கோழிக்கூண்டு கிழக்கு பக்கமாக வலதுப்புறத்தில் அமைந்துள்ளது. எனது வீட்டிற்கும் கோழிக்கூண்டிற்கும் இடையே சுமார் 32 அடி இருக்கும். ரோட்டுக்கும் கோழிக்கூண்டிற்கும் இடையில் 3 மீட்டர் தூரம் இருக்கும். போலிசார் மதியம் 3 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். போலிசார் வந்தபோது அங்கு தகராறு நடந்து கொண்டிருந்தது என்றால் அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் நீங்கள் யார் எந்த ஊரு என்று விசாரித்துக்கொண்டிருந்தார்கள். அதற்குள் போலிசார் வந்து நீங்கள் யாரும் எதுவும் கேட்க வேண்டாம் என்றார்கள்.

5. நான் எனது கணவருக்கு தான் தகவல் தெரிவித்தேன். போலிசாருக்கு தகவல் தெரிவிக்கவில்லை. எனது கணவர் வந்த பின்பு தான் அக்கம் பக்கம் உள்ளவர்கள் போலிசாரிடம் தகவல் தெரிவிக்க சொன்னார்கள். சம்பவம் நடந்து சுமார் அரை மணி நேரம் கழித்து போலிசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலிசார் புகார் கொடுக்க சொன்னதால் எனது கணவர் புகார் கொடுத்தார் என்றால் ஆம் கோழி காணாமல் போனது தொடர்பாக அவர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். எனது கணவர் நான் புகார் செய்த போது அமரபூண்டி பக்கத்தில் இருந்தார். அமரபூண்டியில் இருந்து எனது வீட்டிற்கு 2 கி.மீ தொலைவு உள்ளது. 10–15 நிமிடத்தில் வந்துவிடலாம். நான்

சத்தம் போட்ட போது எதிரிகள் எனது வீட்டிற்க்கு பக்கத்தில்தான் இருந்தார்கள். எனது மாமியார் எனக்கு பின்னால் தான் வீட்டைவிட்டு வெளியே வந்தார் என்றால் நான் சமையல் செய்து கொண்டிருந்தேன். முதலில் என் மாமியார் வந்தார். கோழி சத்தம் கேட்டு அவருக்கு பின்னால் நானும் வீட்டைவிட்டு வெளியே வந்தேன். சம்பவத்தின்போது எதிரி பன்னீர்செல்வத்திற்கு காயம் ஆனது என்றால் சரிதான்.

6. நான், எனது கணவர் மற்றும் எனது மாமியார் அடித்துதான் காயமானது என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவத்தின்போது வழிப்போக்கர்களாக இருசக்கரவாகனத்தில் வந்தார்கள் என்றும் நாங்கள் சந்தேகத்தின் பேரில் எதிரிகளை பிடித்து பொய்வழக்கு ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு கிழப்புறத்தில் சாலை இல்லை என்றும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அவ்வாறு இருந்திருந்தால் மாதிரி வரைபடத்தில் அதைக்காட்டிருப்பார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது வீட்டிற்கு கிழப்புறமும், மேபுறமும் சாலை உள்ளது.

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.11.21 10:34:03 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி

**Previous Examination date – 01-11-2023**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 268 of 2018**

**Deposition of Witness P. W.3**

| | |
|---|---|
| **Name : சின்னதாயிமேரி** | **Father/Husband's Name: கணபதி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 01.11.2023.**

**Accused A1 and A2 present.**

**முதல் விசாரணை**

1. நான் எவிசன் நகர் மேலபாளயத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 5,6 வருடங்களுக்கு முன்பாக மதியம் 2-3 மணி இருக்கும். எனக்கு பிரசர் இருந்ததால் பிரசர் மாத்திரை போட்டுக்கொண்டு படுத்திருந்தேன். அப்போது கோழி கத்தும் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தப்போது கோழிக்கூண்டில் இருந்து கோழிகளைப் பிடித்து கையில் வைத்திருந்த பையில் ஆஜர் எதிரிகள் போடப்பார்த்தார்கள். நான் சத்தம் போட்டவுடன் எனது மருமகள் வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டார். அக்கம்பக்கத்தில் 100 நாள் வேலைவாய்ப்பு வேலைசெய்து கொண்டிருந்தவர்கள் சத்தம் கேட்டு வந்துவிட்டார்கள். எனது மகன் அமரபூண்டியில் துணி வியாபாரத்திற்கு சென்றிருந்தார். போன் மூலம் தகவல் சொன்னவுடன் அவரும் வந்துவிட்டார். எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் இருந்த சுப்பிரமணி எனது வீட்டிற்கு வந்து சத்தம் போட்டார். அப்போது அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கு கிறுகிறுப்பாக வந்ததால் நான் போய் படுத்துக்கொண்டேன். பிறகு சுப்பிரமணி மற்றும் எனது மகன் கம்பிளைண்டு கொடுப்பதற்காக பேப்பர் வாங்க சென்றார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எனது மகன் மற்றும் மருமகளை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. எனது வீட்டிற்கும் 100 நாள் வேலைவாய்ப்பில் வேலை செய்பவர்கள் இடத்திற்கம் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் நீதிமன்றத்தில் வாயில் கதவு வரை இருக்கும் என்று சாட்சி கூறுகிறார். நான் சத்தம் போட்டபோது எதிரிகள் ரோட்டில் இருந்தார்கள் என்றால் சரியல்ல. எங்கள் கோழிக்கூண்டிற்கு பக்கத்தில் இருந்தார்கள். கோழிக்கூண்டிற்கும் ரோட்டிற்கும் இடையில் கொஞ்ச தூரம் தான் இருக்கும். கோழிக்கூண்டு எனது வீட்டிற்கு இடது புறம் உள்ளது. நான் சத்தம் போட்ட பிறகு தான் எனது மருமகள் வீட்டில் இருந்து வெளியே வந்தார் என்றால் சரிதான். நான் சத்தம் போட்ட உடன் வீட்டிலிருந்து எனது மருமகள் வெளியே வந்துவிட்டார். எனது மகன் அமரபூண்டியில் இருந்தார். தகவல் சொன்னவுடன் சிறிது நேரத்தில் வந்துவிட்டார். போலிசார் யார் யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எனது மகன் சொன்னதன்பேரில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது இரண்டு கண்ணால் பார்த்ததை தான் சொல்கிறேன். ஆஜர் எதிரிகள் தான் கோழிகளை திருடினார்கள். எதிரிகள் சம்பவத்தின்போது வழிப்போக்கர்களாக இருசக்கரவாகனத்தில் வந்தார்கள் என்றும் நாங்கள் சந்தேகத்தின் பேரில் எதிரிகளை பிடித்து அடித்து காயம் ஏற்படுத்திவிட்டு அதிலிருந்து தப்பிப்பதற்காக பொய்வழக்கு ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல.

K R KALAIVANAN

Digitally signed by K R KALAIVANAN
Date: 2023.11.21 10:34:14 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி